# திருமலையில் புலிகள் அதிரடி; 5 படையினர் பலி

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 20 இதழ் 77
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 03 — 05 — 1993

(திருமலை)

திருமலை மாவட்டத்தில், இராணுவ முகாம் ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகளால் முற்றாக தாக்கி அழிக்கப்பட்டது. இதன் போது 5 படையினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். நவீன ரக ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டன. சிப்பாய்கள் பலர் காயங்களுடன் தப்பி ஓடினர்.

(2-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கிலிருந்து பெருமளவு படை கொழும்பு விரைவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்த முனைகளிலிருந்து ஆயிரக்கணக்கான படையினர் கொழும்பு மாநகரின் பாதுகாப்புக்கென அவசரமாக நேற்று அழைக்கப்பட்டனர்.

(2-ம் பக்கம் பார்க்க)

## பதில் ஜனாதிபதி சிறிமா சந்திப்பு

(கொழும்பு)

பதில் ஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்காவை, எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துப்

(2-ம் பக்கம் பார்க்க)

### ● நெருக்கடியான நிலையில்

# இலங்கையின் புதிய ஜனாதிபதி நாளை தெரிவுசெய்யப்படுவார்!

## இரகசிய வாக்கெடுப்பு நடக்கும்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாஸாவின் மரணத்தை அடுத்து, பதில் ஜனாதிபதி தலைமையில் நாளை செவ்வாய் காலை கூடும் நாடாளுமன்றம் புதிய ஜனாதிபதி ஒருவரை தேர்ந்தெடுக்கவுள்ளது.

(2-ம் பக்கம் பார்க்க)

## விஜயதுங்க வேட்பாளர்

ஜனாதிபதி வேட்பாளராக ஐ. தே. கட்சி தற்போதைய பதில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவை ஏகமனதாக தெரிவுசெய்துள்ளது. ஐ. தே. கட்சியின் செயற்குழு மற்றும் ஐ. தே. கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கள் ஒன்றிணைந்து நேற்று நடாத்திய கூட்டத்தில் இத்தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது. ஐ. தே. கட்சியின் தவிசாளர் டாக்டர் எம். கே. எம். கலீல் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் டி. பி. விஜேதுங்கவின் பெயரை கட்சியின் பொதுச் செயலாளரும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான சிறிசேன கூரே முன்மொழிந்தார். நீதி உயர்கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் வழிமொழிந்தார்.

## எதிர்க் கட்சிகள் குழப்பம்

நாளை நாடாளுமன்றில் நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதிக்கான தேர்வில் எதிர்க் கட்சிகள் சார்பில் யார் போட்டியிடுவார் என்பது பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது. எதிரணிகளுக்கிடையில் ஒற்றுமை இன்மையும் அதிகாரப் போட்டியும் நிலவும் இவ்வேளையில் அவசர நிலை கருதி எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எதிரணியினரின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜனாதிபதி பதவிக்கு போட்டி

புதிய ஜனாதிபதித் தெரிவு தொடர்பாக, ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பெரும் போட்டி நிலவியது. அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தாம் ஜனாதிபதியாவதற்குப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். இவர் தமக்கு ஆதரவு தேடும் முயற்சியில் தீவிரமாக இறங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், பெரும் போட்டியைத் தவிர்ப்பதற்காகவே திரு. விஜயதுங்க ஜனாதிபதி வேட்பாளராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## தெற்கில் பெரும் முறுகல் நிலை

ஜனாதிபதி பிரேமதாஸாவின் கொலையை அடுத்து ஆளும் ஐ. தே. க. தொண்டர்களுக்கும் எதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்குமிடையில் மோதல்கள் வெடிக்கும் அபாயம் எழுந்துள்ளது. ஜனாதிபதி பிரேமதாஸா கொலையுண்ட செய்தி வெளிவந்தபோது தெற்கில் பலபகுதிகளிலும் வெடிகள் கொழுத்தப்பட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்யப்பட்டமை ஐ. தே. க. ஆதரவாளர்களிடையே பெரும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது, இதையடுத்து முறுகல் நிலை ஒன்று தோன்றியுள்ளது.

## எந்தத் தீர்வையும் இணிக்க முடியாது

இலங்கை அரசியலில் பாரதூரமான மாற்றங்கள் ஏதும் ஏற்படும் சாத்தியமில்லை என அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார். நாட்டில் வன்செயல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் இக்கொலையை யார் செய்திருப்பார்கள் என கூறுவது கடினம். நாட்டில் வன் செயல் சர்வசாதாரணமாகிக் கொண்டே வருகிறது. நாடு இன்றிருக்கும் சூழ்நிலையில் வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு எதனையும் தீர்வாக இணிக்க முடியாது. அது பொருத்த மற்ற ஒரு செயல் ஆகும் என்றார்.

## இராணுவத் தலையீடு அதிகரிக்கும்?

இலங்கை அரசியலில் ஆயுதப் படையினரின் நிலை என்ன என்பது பெரும் கேள்விக் குறியாகவே உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் ஆயுதப் படை பெரிதாக வளர்ந்துள்ளது. ஆயுதப் படை அரசியலில் ஒருபோதும் நேரடியாகத் தலையிட்டதில்லை, ஆனால் இன்னும் சில ஆண்டுகளில் ஜனநாயக முறையில் நன்மைகள் தோன்றவில்லை எனக் காணும்பட்சத்தில் படைத் தலைமையின் நேரடித் தலையீடு அரசியலில் அதிகரிக்கலாம். இதன் மூலம் நாட்டில் ஏற்படும் விளைவுகள் மோசமாகலாம் என பி.பி.ஸி. தெரிவித்தது.

(4-ம்பக்கம் பார்க்க)

## புலிகள் மீது அரசு சந்தேகம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் கொலைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பிருக்கலாமென பொலிஸார் கருதுகின்றனராம்.

கொலை நடந்த இடத்திலிருந்து சயனைட் குப்பி ஒன்றை பொலிஸார் எடுத்துள்ளனராம். மேலும் கொலையாளியின் தலைப்பகுதி எதுவித சிதைவுமின்றி பொலிஸாரால் மீட்கப்பட்டது. இந்த தலை

(4-ம் பக்கம் பார்க்க)

## மாகாண தேர்தல் மே 17-ல் நடைபெறும்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் கள்திட்டமிட்டபடி இம்மாதம் 17ம் திகதி திங்கட்கிழமை நடைபெறுமென தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா அறிவித்துள்ளார்.

தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகும் நிலையில் இருப்பதாகவும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை தேர்தலை ஒத்திப்போடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியும் கோரவில்லை எனவும் அவர் கூறினார். (சி)

## பிரேமாவை அடையாளம் காட்டிய கைக்கடிகாரம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமாவின் உடல் அவரது கைக்கடிகாரத்தையும் மற்றும் ஒரு சில பொருட்களையும் வைத்தே அடையாளம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குண்டுவெடிப்பால் அவரது உடல் மிக மோசமாக சிதறிவிட்டதாகவும் அவரது உடல் ரத்தச் சகதி போலாகிவிட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## எலிசபெத் மகாராணி ஆழ்ந்த அனுதாபம்

(லண்டன்)

ஜனாதிபதி பிரேமதாஸாவின் மரணம் குறித்து பிரிட்டிஷ் அரசி எலிசபெத் மகாராணியார் அனுதாபம் தெரிவித்து செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

மேலும் பிரிட்டன், ஜேர்மனி, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, சீனா, யப்பான், கொரியா, டுனிஷிய தலைவர்

4-ம் பக்கம் பார்க்க)

## திரையரங்குகள் யாவும் 6 நாட்கள் மூடப்படும்

(கொழும்பு)

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், திரைப்படக் கூடத்தாபனம் 6 நாட்கள் துக்க தினம் அனுஷ்டிக்க இருக்கிறது.

(2-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

5KVஇற்கும் 10KVஇற்கும் இடைப்பட்ட வலு உடையதும் டீசலில் இயங்கக்கூடியதுமான ஜெனரேற்றர் தேவை. தொடர்பு: நளினி இறைண் டிங் மில் 730 கே. கே. எஸ். றோட் யாழ்ப்பாணம்.

(சி-61)

### (O/L) MATHS

G. C. E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலத்தில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி.

(சி-74)

### அறிவுக் களஞ்சியம் 11

வெளிவந்துவிட்டது!

(ஏ-3095)

### ஆவணப்படுத்தல்

1984—1990 வரை வெளியிடப்பட்டு வந்த வீரவேங்கை பத்திரிகையை நாம் ஆவணப்படுத்த (பாதுகாக்க) விரும்புவதால் இப்பத்திரிகை வைத்திருப்பவர்கள் இதனைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்

முகவரி:
மாவீரர் படிப்பகம்
பலாலி வீதி,
கோண்டாவில்.

(சி-73)


## இராசி பலன்

03-05-1993
திங்கட்கிழமை
(தமிழுக்கு சித்திரை 20)

தவசதசி பி. ப. 4-16வரை: உத்தரம் மு. ப. 10-42 வரை: இராகு காலம் காலை 7-25 முதல் 8-56 வரை. சுபநேரம் காலை 11-56 முதல் 1-26 வரை. சித்தயோகமும் பிரதோஷ விரதம்.

மேடம்: தொழில் லாபம், வழி மாறுதல், காரியபலிதம்.

இடபம்: முயற்சிகள் தோல்வி, அலைச்சல், கடும் வாதம்.

மிதுனம்:- குடும்ப மனஸ்தாபம், ஏமாற்றம், அவசர பயணம்.

கடகம்: நல்ல புகழ், விடா முயற்சி. அயலவர் நேசம்.

சிங்கம்: காயப்படுதல், வீண் கஷ்டம், பண நெருக்கடி.

கன்னி: உத்தியோக பிரிவு, புத்திரர் உதவி, நேசத் துணிவு.

துலாம்: உடல்நலம்கெடல், கீழ்ப்படிதல், மனக்கொதிப்பு.

விருச்சிகம்: பெண் மூலம் உதவி, இனசன நன்மை, காரிய சித்தி.

தனுசு: பிறருக்கு உதவுதல், பண லாபம், பழைய நினைவு.

மகரம்: வீண் பழி கோப வார்த்தை, மனச்சஞ்சலம்.

கும்பம்: இடையூறு, இடமாற்றம், அவமதிப்பு.

மீனம்: உறவினர் பெருமை, பலனுள்ள பணி, பாராட்டு.

— ஜோதிடர்

# ஈடுசெய்ய முடியாத இழப்பு: இந்திய தலைவர்கள் அனுதாபம்

(புதுடில்லி)

ஜனாதிபதி பிரேமதாசவின் மரணம் தெற்காசியாவுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகுமென்று இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா தெரிவித்துள்ளார்

இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா, பதில் ஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்காவிற்கு அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்தியில் ஜனாதிபதி பிரேமதாசவின் கொலை பற்றி ஏற்பட்டிருப்பது இலங்கைக்கு மாத்திரமன்றி தெற்காசியப் பிராந்தியம் முழுவதற்குமே ஒரு மாபெரும் இழப்பாகும். அடிப்படை மனித கௌரவத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் அனைவராலும் கண்டிக்கப்படக்கூடிய ஒரு கொடூரமான செயல் இது வென்று இந்திய வெளிநாட்டமைச்சர் தினேஷ்சிங் கூறியுள்ளார்.

தமிழக ஆளுநர் பீஷ்மன் நாராயணசிங், உபஜனாதிபதி கே. ஆர். நாராயணன், பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் ஆகியோரும் தமது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங், பி ஜே. பி. கேரள முதலமைச்சர் கே. கருணாகரன், மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு ஆகியோரும் தமது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர். (இ)

# பில் கிளிங்டன் ஆழ்ந்த கவலை

(வாஷிங்டன்)

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச படுகொலை செய்யப்பட்டது குறித்து அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார்.

இந்தப் படுகொலையையிட்டு தாம் பெரிதும் துயரம் அடைந்திருப்பதாக வெள்ளை மாளிகையினால் விடுக்கப்பட்ட அறிக்கையொன்றின் மூலம் ஜனாதிபதி பில் கிளிங்டன் தெரிவித்துள்ளார்.

இது ஒரு கொடூரமான பயங்கரவாத நடவடிக்கை என்று அவர் கண்டித்துள்ளார். (ரி)

# பங்களாதேஷ் பிரதமர் கவலை

(டாக்கா)

பங்களாதேஷ் பிரதமரும் "சார்க்" நாடுகளின் தலைவருமான பேகம் காளிதாஸியா ஜனாதிபதி பிரேமதாசவின் படுகொலையைக் கண்டித்துள்ளார். அவரது மரணம் தெற்காசியாவிற்கு பெரும் இழப்பு என்று அவர் கூறியுள்ளார். இந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த 100 கோடி மக்கள் தமது இனிய நண்பரை இழந்து விட்டனர் என்று அவர் பங்களாதேஷ் தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில் தெரிவித்தார். பங்களாதேஷ் ஜனாதிபதியும் இந்தப் படுகொலையைக் கண்டித்திருக்கிறார். (ரி)

# பிரேமாவின் பூதவுடலுக்கு
## அமைச்சர்கள், எம். பிக்கள் அஞ்சலி

(கொழும்பு)

பதில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோர் காலம் சென்ற ஜனாதிபதிக்கு தமது இறுதி மரியாதைகளை செலுத்தினர்.

காலம்சென்ற ஜனாதிபதிக்கு அஞ்சலிசெலுத்துமுகமாக ஆயிரக்கணக்கான மக்கள் சுசரிதமந்திரியவிற்கு அருகில் நேற்று கூடியிருந்தனர்.

ஜனாதிபதி பிரேமதாசவின் பூதவுடல் இன்று ஜனாதிபதி மாளிகைக்கு எடுத்துச்செல்லப்படும். ஜனாதிபதியாகவும் முப்படைகளின் தளபதியுமாய் விளங்கிய அவருக்கு 6ம் திகதி இறுதிக் கிரியையின் போது முழு இராணுவமரியாதையும் வழங்கப்படவுள்ளன. (ரி)

# சட்டம் ஒழுங்கு நிலைநாட்ட முப்படைகளுக்கு பணிப்பு

(கொழும்பு)

நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் முப்படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் ஆகியோரை பதில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தப் படுகொலைக்குப் பொறுப்பானவர்களை இனம் காணவும் அவர்களை சட்டத்தின் முன் கொண்டுவரவும் அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறது என்று பதில் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

இவ்வேளையில் நாட்டுமக்கள் அனைவரும் அமைதியாக இருக்கவேண்டும் என்றும் பொறுப்புணர்வோடும் பொறுமையோடும் செயல்பட வேண்டும் என்றும் அவர் மேலும்கேட்டுள்ளார். (ரி)

### வடக்கு-கிழக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிபிரேமதாஸாவின் படுகொலையையடுத்து கொழும்பு மாநகரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதையடுத்தேவடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து மேலதிகபடையினர் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் படையினரின் நடவடிக்கைகள் இதனால் பாதிக்கப்படமாட்டாதெனவும், அங்கு மேலதிகமாக உள்ள படையினரே அழைத்துச் செல்லப்பட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். தேவையேற்படும் பட்சத்தில் மேலும் படையினரை தென் பகுதிக்கு அழைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம். (இ.சி)

### நெருக்கடியான
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கான வெற்றிடத்தை நாடாளுமன்றம் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் நிரப்பவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களில் மிகப் பொருத்தமான ஒருவர் அரசியல் யாப்பு விதிமுறைகளுக்கமைய இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவார். இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர் அடுத்த ஆண்டு ஜனாதிபதியின் பதவிக்காலம் முடியும் வரை பதவி வகிக்க முடியும்.

தற்போது நாடாளுமன்றில் 125 ஐ. தே. க உறுப்பினர்களும் உள்ளனர்.

இந்த அவசரக் கூட்டம் குறித்து நாடாளுமன்றச் செயலாளர்நாயகம் நாடாளுமன்றத்தின் சகல எம். பிக்களுக்கும் அறிவித்துள்ளார். (ஈ-இ-சி)

### திருமலையில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் அதிகாலை 2-30 மணியளவில், திருமலை மாவட்டத்தில் உள்ளபம்புறசவெவ என்ற இடத்தில் அமைந்த இராணுவ முகாம் மீது நடாத்தப்பட்ட இந்தாக்குதல் சுமார் 15 நிமிட நேரம் நீடித்தது.

50 இராணுவத்தினர் தங்கியிருந்த இம் முகாம் விடுதலைப் புலிகளின் அதிவேக உக்கிர தாக்குதலையடுத்து புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. பின்னர் 12 இராணுவ காவலரண்களையும் இராணுவத்தினர் தங்கும் 10 அறைகளையும் புலிகள் தாக்கி அழித்தனர்.

இத்தாக்குதலில் ஏ. கே. இலகு இயந்திரத்துப்பாக்கி-01 இதற்குரிய ரவைக்கூடுகள்-04, ரவை இணைப்பிகள்-94, ரி. 81 ரக துப்பாக்கி-01, இதற்குரிய ரவைக்கூடுகள்-07, ரி. 56 துப்பாக்கிகள்-03, ரவைக்கூடுகள்-12. நடுத்தர ரவைகள் 4824, எம். 75 ரக கைக்குண்டுகள்-02, ஜே. ஆர். கைக்குண்டு-01. தலைக்கவசங்கள்-07. சப்பாத்து-30 சோடி. ராணுவ பைகள்-20, தண்ணீர் தாங்கி-08, இராணுவ தொப்பிகள்-13, இராணுவ இடுப்புபட்டிகள்-11 ஏ கே இலகு இயந்திர துப்பாக்கிக்குரிய ரவைக்கூடு தாங்கிகள்-10, ஏ. கே. ரவைக்கூடு தாங்கிகள்-08, தண்ணீர் கான் தாங்கி-28 ஆகிய ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் திலீபன் அல்லது தொல்காப்பியன் என அழைக்கப்படும் சண்முகராசா சோ (மூதூர்) கப்டன் நவன் அல்லது செல்லத்தம்பி எனப்படும் யோகராசா சுபாஸ்கரன் (திரியாய்) ஆகியோர் வீரச்சாவடைந்தனர். (க)

### பதில் ஜனாதிபதி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்கள் நடத்தினர்.

இதன்போது அவர், மாகாண சபைத் தேர்தலை பிற்போடக்கூடாது எனவும், எதிர்க் கட்சித் தலைவர்களுக்கும், மாகாண சபை வேட்பாளர்களுக்கு உடனடியாகப் பாதுகாப்பு வழங்கவேண்டும் எனவும், தேர்தல் கூட்டங்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும் கோரினர்

இதற்குப் பதிலளித்த பதில் ஜனாதிபதி, திட்டமிட்டபடி மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் எனவும், கட்சித் தலைவர்களினதும், வேட்பாளர்களினதும் பாதுகாப்புக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளதுடன், தேர்தல் கூட்டங்களுக்கும் விசேடபாதுகாப்பு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். (கி)

### திரையரங்குகள்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 6 நாட்களிலும் சகல திரைப்பட அரங்குகளிலும் திரைப் படங்கள் காண்பிக்கப்படமாட்டாது. இதேபோல் ரூபவாஹினி, வெசாக் விசேட நிகழ்ச்சிகள் அனைத்தையும் ரத்துச் செய்துள்ளது. மேலும் பொது வைபவங்கள் பலவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. (சு-கி)

### அன்பளிப்பு
(உடுவில்)

வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த சனசமூக நிலையங்களுக்கு, வலிகாமம் வடக்குப் பிரதேச சபையால், பந்து மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

வலிகாமம் வடக்குப் பிரதேச சபைச் செயலா டி. வி. எம். இராசசிங்கத்தினால், இப் பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த 30க்கும் அதிகமான சனசமூக நிலையங்களுக்கு இவை வழங்கப்பட்டன. (109)

### கௌரவிப்பு
(உடுவில்)

இணுவில் கிராமத்தில் அறிவுப் பணி செய்த அறிஞர்களான திரு. கை. கதிர்காமநாதன், திரு. சபா. ஆனந்தர் ஆகியோர், இணுவில் இளம் தொண்டர் சபையினரால் திருமுறைப் பெருவிழாவின் போது கௌரவிக்கப்பட்டனர்

இவ்வறிஞர்களின் சேவையைக் கௌரவித்து, யாழ் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் பொன்னாடை போர்த்தினர். (190)


உ
சிவமயம்

## திருநெல்வேலி
## ஸ்ரீநீலாயதாக்ஷி சமேத
## ஸ்ரீ காயாரோஹணேஸ்வரர் ஆலய
## மஹோத்ஸவம்

நிகழும் ஸ்ரீமுக வருடம் சித்திரைத் திங்கள் 20ம் நாள 3-5-93 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் துவஜாரோஹணம் (கொடியேற்றம்) நடைபெறும். தொடர்ந்து 19 நாட்கள் மஹோற்சவம் நடைபெற்று 20ம் நாள் பூங்காவனம் நடைபெறும்.

20-5-93 வியாழக்கிழமை காலை பஞ்ச இரதோற்சவமும் 21-5-93 வெள்ளிக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

காலை 7-00 மணியளவில் வசந்த மண்டபப் பூஜை நடைபெறும்.

மஹோற்சவ கிரியைகள் யாவும் திருவருள் துணைகொண்டு சிவஸ்ரீ சதா யோகீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இங்ஙனம்
ஸ்ரீகாயாரோஹணேஸ்வரர் தேவஸ்தானம்

(எ- 3100)

யாழ்ப்பாணம்

# பூர்வதனுக்கோடி எனும் வில்லூன்றி புனித தீர்த்த

# சித்திரைப் பூரணைப் பெருவிழா சிறப்பிதழ்

[5 - 5 - 93]

வில்லூன்றி புனித தீர்த்தம் வட இலங்கையிலுள்ள இந்துக்களுக்குரிய முக்கிய மூன்று புனித தீர்த்தங்களுள் ஒன்றாகும். கீரிமலை, திருவடி நிலை ஆகியவை மற்ற இரண்டு மாகும். வில்லூன்றி தீர்த்தம் யாழ்ப்பாண மாநகரசபை எல்லையினுள் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத் தில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது.

வில்லூன்றி வீரகத்தி விநா யகர் கோவில்) அக்கோவி லுக்குரிய தீர்த்தமாக வும் வில்லூன்றி தீர்த்தம் அமையலாயிற்று. வில்லூன்றி விநாயகப்பெருமான் சித்தி ரைப் பூரணை, ஆடி அமா வாசை, மகாசிவராத்திரிக்கு மறுதினம் ஆகிய மூன்று தினங்களிலும் தீர்த்தவாரி யின் பொருட்டு வில்லூன்றித் தீர்த்தத்திற்கு எழுந்தருளு வது வழமையாயிருந்தது. ஆல

1951 ஆம் ஆண்டு தீர்த்தக் கேணியும் அதன் சுற்றுடலி லுள்ள வண்ணை வைத்தீஸ் வரன் கோவில் ஆதனமும் மேற்படி தேவஸ்தான அறங் காவலரால் வில்லூன்றிதேவஸ் தான அறங்காவலருக்கு குத்த கைக்கு வழங்கப்பட்டது. அவ்வாண்டிலேயே இராமர், இலக்குவர், சீதாபிராட்டிக்கு கோவில் கட்டப்பட்டது. 1951ஆம்ஆண்டுமுதல் 1971ஆம் ஆண்டு வரை வில்லூன்றி

## நல்லை ஆதீனம் நல்லாசி

வில்லூன்றி புனித தீர்த்தக் கேணி புராதன வரலாற்றுப் புகழ்மிக்கது. இங்கு பிரணவ சொரூபியாம் விநாயகப்பெரு மானுக்குத் தீர்த்தோற்சவம் நிகழவிருப்பதறிந்து பெரு மகிழ்ச்சியடைகிறோம். இப் புனித ஸ்தானம் முற்காலத் தில் சைவமக்கள் அந்திமக் காலக்கிரியைகள், பிதிர்க்கடன் கள் செய்யும் இடமாகத் திகழ்ந்தது. கீரிமலைக்குச் செல்ல இயலாத இக்காலகட் டத்தில் இவ்விடம் மேம்பா டுடைத்து.

பூஜைகள், கிரியைகள், சடங்குகள் எல்லாவற்றிலும் விநாயகப் பெருமானுக்கே முதலிடம். திரிகரணசுத்தி யோடு அவரின் திருவடிகளை இறுகப் பற்றிக்கொண்டால், எம்மை அணுகிவரும் துன்பங் களெல்லாம் பொசுங்கிப்போம்.

— ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்

## வில்லூன்றி புனித தீர்த்தம்: வரலாறு

வில்லூன்றி தீர்த்தம் ஸ்ரீ ராமபிரானால் இராவண சங்காரத்தின் பொருட்டு இலங்கை வந்தபோது ஸ்தா பிக்கப்பட்டதாகவும் அவரது கோதண்டம் ஊன்றப்பட்ட போது பிரவாகித்த தீர்த்த மெனவும் கருதப்படுகிறது. இத்தீர்த்தத்தில் இராம வானர யங்கள் தாகசாந்தி பெற்ற தாயும் இத்தீர்த்தத்தின் மருங்கில் இராமபிரான் இராவ வண சங்கார தோஷம் நீங்க சிவபூசை செய்ததாயும் அதன் ஞாபகமாக அந்நியர் ஆட்சிக் காலத்தின்முன் இத்திருக்குள மருகே ஒரு சிவாலயம் இருந்த தாகவும், பின் அது அந்நியர் ஆட்சிக்காலத்தே அழிக்கப் பட்டதாகவும், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சிறிது சமய சுதந்திரம் வழங்கப்பட்ட போது சிவாலயமிருந்தவிடத் தில் விநாயகர் சிலை வைத்துப் பூசிக்கப்பட்டதாயும் அவ் விநாயகர் சிலையே இன்று வில்லூன்றி வீரகத்தி விநா யகர் ஆலய ஸ்தாபிக் கொண்டெழுந்தருளியிருக் கிறதெனவும் கர்ணபரம் பரைக் கதைகள் கூறுகின்றன. இராமபிரான் தனுஷ்கோடி வழியாக இராமேஸ்வரம் சென்று சிவ வழிபாடு செய்யு முன் பூசித்த தலமாதலால் இவ்விடம் பூர்வதனுஷ்கோடி எனவும் வழங்கப்பட்டது. வில்லூன்றி விநாயகப்பெரு மானின் மிகப் பழமை வாய்ந்த திருவூஞ்சல் திருப் பாக்களின் மூன்று இடங்களில் கடல் அலைகள் அரவணைக்க பூர்வதனுஷ்கோடியில் வீற்றி ருந்து அருள்பாலிப்பவராய்ப் பேசப்படுகின்றனர். ஆனைக் கோட்டைப் பகுதியில் சில காணிகள் 'தனுஷ்கோடி தோட்டம்' என்ற பெயரில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

அந்நியராட்சியில் பொலி விழந்து கிடந்த வில்லூன்றி தீர்த்தம் அமைந்திருந்த நிலம், அக்காலத்தில் ஒல் லாந்த தேசாதிபதியுடன் நட் புரிமைகொண்டு, அச்சொல் வாக்கை நல்ல முறையில் பயன்படுத்தி வண்ணை வைத் தீஸ்வரன் கோவிலை அமைத்த ஒப்புயர்வற்ற சைவ நற்றொண்டன் ஸ்ரீமான் வைத்திலிங்கச் செட்டியார் அரசிடமிருந்து பெறப்பட்டு வண்ணை வைத் தீஸ்வரன் கோவிலுக்குரிய தீர்த்தமாக்கப்பட்டு, பிரதி வருடமும் மாசிமக தினத் தன்று வண்ணை வைத்தீஸ் வரர் அன்னை வாலாம்பிகை யுடன் தீர்த்தவாரியின் பொருட்டு வில்லூன்றிக்கு எழுந்தருளும் வழமையும் ஏற்படுத்தப்பட்டது. இவ் வழமை 1940ஆம் ஆண்டு களில் நிறுத்தப்பட்டதாக அறியக்கிடக்கிறது.

வில்லூன்றிச் சிவாலயம் இருந்த இடத்தில் வைத்து வழிபடப்பட்டு வந்த விநாய கர் சிலை பின்னர் ஒரு விநா யகராலயமாக வளர்ச்சியுற்ற போது (இப்போதிருக்கும்

கத்தில் பேணப்பட்டுள்ள தக வல்களிலிருந்து இது 1954-ம் ஆண்டு வரை நடைபெற்று வந்ததாக அறியமுடிகின்றது. 1957-ம் ஆண்டு மகாகும்பா பிஷேகத்தின் பொருட்டு நடந்த கோவில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது முதல் கோவிலுக்கு நிறுத்தப்பட்ட தீர்த்தவாரி பின் கடந்த 40 வருடங்களாக நடைபெற வில்லை.

இந்த நூற்றாண்டின் ஆரம் பத்தில் சுமார் 75 ஆண்டு களுக்கு முன் வில்லூன்றியை ஞானிகளும், தவசீலர்களும் தேடி நாடி மொய்க்கும் வண் ணம் போல் நாடி வந்த செய் திகளை திரு. ச. அம்பலவாணர் பாவலரால் எழுதப்பட்டு அலக நிலைப் பதிப்பக வெளியீடாக 1958-ம் ஆண்டு பிரசுரமான இலங்கைச் சுவாமிகள் ஞானமும் ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் நினைவு மலர் என்ற நூலிலுள்ள 2, 3, 4 ஆம் பக்கங்கள் பறை சாற்றி நிற்கிறது.

தேவஸ்தான பாதுகாப்பிலும் தீர்த்தக்குளமும் மடங்களும் நிருவகிக்கப்பட்டன. தீர்த்தக் கேணி நல்ல நிலையில் பேணப் பட்டு, மடங்களில் அந்தியேட் டிக் கிரியைகள் நடைபெற்று வந் தன.

1971ஆம் ஆண்டில் வில்லூன்றி விநாயகர் தேவஸ்தான அறங் காவலராயிருந்த திரு. சோம சுந்தரம் இராசரத்தினம் அம ரத்துவமடைந்ததைத் தொட ர்ந்து வில்லூன்றி தீர்த்தம் அமைந்திருந்த ஒன்பதுபரப்புக் காணியும் வண்ணை வைத்தீஸ் வரன் கோவில் அறங்காவலர் களிடம் திரும்ப ஒப்படைக்கப் பட்டது.

1965-70ஆம் ஆண்டுகளி லேயே இக்காணியில் ஒரு குடி யேற்றத்திட்டம் ஆரம்பிப்ப தற்கான பிரயத்தனங்கள் நடந்தன. 1972ஆம் ஆண்டில் இக்காணியில் மக்கள் குடியேறி னர்.

19-5-1976 ஆம் திகதி 'வில்லூன்றி தீர்த்தக் கேணி புனருத்தாரணசபை'

## பேராசிரியர் இ. குமாரவடிவேல்

செயலாளர், வில்லூன்றி புனித தீர்த்தபரிபாலனசபை

சுற்றுக்கண்டு சுவாமிகள், ஸ்ரீமான் மா. குமாரசாமி, ஸ்ரீமான் வல்லிபுரம் போன்ற புண்ணிய சீலர்கள் இந்த நூற் றாண்டின் முற்பகுதியில் இத் தீர்த்தத்தை உன்னத நிலை யிற் பேணிப் பாதுகாத்து வந் தனர். இவர்களின் காலத்தின் பின் 1930 களில் வில்லூன்றி சமய ஆசாரம் குன்ற ஆரம் பித்தது. 1938 ம் ஆண்டு யூலை மாதம் 31-ம் திகதி வில் லூன்றி புனித தீர்த் தத்தினைச் செவ்வனே பரிபாலித்தற் பொருட்டு 'சைவ விருத்திச்சங்கம்' என்ற அமைப்பு உதயமாயிற்று. அதன் தலைவராக யாழ். மாந கர முன்னாள் முதல்வர் அமரர் சாம் ஏ. சபாபதியும், செயலாளராக யாழ். மாநகர முன்னாள் உபதலைவரும் வில் லூன்றி விநாயகர் தேவஸ் தான முன்னாள் அறங்காவலரு மாகிய திரு. சோமசுந்தரம் இராசரத்தினமும் சேவையாற் றினர். சங்கம் ஆரம்பத்தில் மிக உற்சாகமாகச் செயற்பட் டது. அவ்வாண்டே பெண்க ளுக்கென வேறாக தீர்த்தம் அகலிக்கப்பட்டுக் கட்டப்பட் டது. மடங்களெல்லாம் திருத்துவிக்கப்பட்டு காவ லாளி நியமிக்கப்பட்டு மிகக் கட்டுப்பாட்டுடன் நிருவகிக் கப்பட்டது. இவை பற்றிய செய்திகளை 1936ஆம் ஆண்டுக் கும் 1951ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைய இந்துசாதனப்பத்திரிகைகளிற் காணலாம். இக் காலகட்டத் தில் வில்லூன்றி மீண்டுமொரு முறை உன்னதநிலையடைந்தி ருந்தது. ஆனால் 1950ஆம் ஆண்டளவில் சைவ விருத்திச் சங்கம் செயலிழந்தது.

என்ற அமைப்பு ஏற்படுத்தப் பட்டு புனித தீர்த்தத்தை அழிவிலிருந்து காப்பாற்றப் பட்டது.

14-03-1980 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசாங்க கசட் மூலம் இக்காணி முழுவ தும் (தீர்த்தக்கேணி, அந்தி யேட்டி மடங்கள், இராமர் கோவில், கிணறு உட்பட) அரசுடமையாக அவசர கால சட்டத்தின்கீழ் பிரகடனப் படுத்தப்படுத்தப்பட்டது. உடனடியாக 'நாவாந்துறை நிலமீட்சித் திட்டம்' என்ற திட்டத்தின்கீழ் ஒன்பது ஏக் கர் பரப்புடைய முழுக்காணி யும் (தீர்த்தக்கேணி, மடங் கள் உட்பட) நிரவி மட்டப் படுத்தப்பட வேண்டுமென திட்டப் பொறியியலாளர் பணிக்கப்பட்டார்.

புனித தீர்த்தத்தால் அக் கறை கொண்ட சில அன்பர் களின் முயற்சியின் விளைவாக 1980ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 20ம் திகதி திட்டப் பொறியிலாளருக்குதேசியவீட மைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையா ளரால் ஒரு ஆணை பிறப்பிக் கப்பட்டது. அதன்படி இக்காணியிலுள்ள சமய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கேணி, மடம் ஏனைய அமைப்புக்கள் யாவும் அவை யுள்ளபடியே இருக்கக் கூடிய தாக நிலமீட்சிப்பணியை நட த்துமாறு பணிக்கப்பட்டது. இதன்மூலம் வில்லூன்றித் திருக்குளமும் மடங்களும் இதர அமைப்புக்களும் பேரழி விலிருந்து தப்பின.

கன்னுபுரம் வீடு கட்டும் வேலைகள் 1980ம் ஆம் ஆண்டு பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட் டது.

## அரச அதிபர் வாழ்த்து

யாழ் மாவட்டத்தில் வில் லூன்றி, கீரிமலை, திருவடி நிலை ஆகிய விசேடமிக்க புண்ணிய தீர்த்தங்கள் உள் ளன. சில இடர்பாடுகளால் கடந்த 20 ஆண்டுகளாக வில் லூன்றி தீர்த்தம் பாவனைக் குகந்ததாயிருக்கவில்லை.

இவ்விடயம் எனது கவனத் திற்குக் கொண்டுவரப்பட்ட போது, "வில்லூன்றி புனித தீர்த்த பரிபாலன சபை" ஒன்று அமைக்க வேண்டிய ஒழுங் குகளைச் செய்தேன். 20-7-92 இல் அங்குரார்ப்பண இச்சபை, வில்லூன்றி தீர்த்தத்தையும் கடற்கரைப் பிரதேசத்தை யும் குறுகிய காலத்தில் நன் னிலைக்குக் கொண்டு வந்துள் ளது பாராட்டப்பட வேண்டி யது. இது போல நாட்டில் உள்ள மக்களின் நீண்ட காலக் குறையை தீர்த்து வைக்கி றது.

பரிபாலன சபையினரின் நற்பணிக்கு அரசு உதவி அமைப்புக்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

கா. மாணிக்கவாசகர்
(யாழ். அரச அதிபரும், யாழ். மாவட்ட ஆணையாளரும்)

## பேரருள் முயற்சிக்குமாரவட்டு

மக்கள் ஆன்மலாபமடைய வழிகாட்டுவன சமயங்கள். சமயங்களுள் தலையாயதுசைவ சமயம். சைவசமயம் முற்று முழுதாக கடவுள் கொள்கை யுடையது. எண்ணற்ற பல வழிகளுக்கும் பணிகளுக்கும் இறைவன் திருவருளே நிலைக் களம் எனக் கூறுகின்றது. முத்தி எனப்படும் பெரும் பயன் உயிர்கள் இறைவனு டைய திருவருளை அடைவது தான் என்று சைவசமயம் சொல்கிறது. இதனால் சைவ சமயத்தில் ஆற்றப்படும்செயல் கள் யாவும் திருவருள் நெறிச் சிவப்பணிகளாகும். இதனுள் ஆன்மலாபமும் முத்திப்பேறும் கிடைக்கிறது. எனவேதான் வில்லூன்றி பதியின்கண் இலாபம் அமை ந்து கிடக்கும் தீர்த்தக்கேணி யைப் புனரமைப்புச் செய்து இறைவனின் தீர்த்த நீராடல் கொள்ள எடுக்கும் பேரருள் முயற்சிக்கு அன்பர்கள் முன் வந்தமை பாராட்டுதற்குரிய விடயமாகும்.

—ஸ்ரீலஸ்ரீ கை. திருஞான சம்பந்தக் குருக்கள் சரணவாய்

1984ம் ஆண்டு வீடமைப் புத் திட்ட வேலைகள் முடிவ டைந்தது. 1984க்கு ஆம் ஆண்டின்பின் நிலவிய அசா தாரண அரசியல், இராணுவ சூழ்நிலைகளால் எதுவித ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை யும் எடுக்க முடியாதிருந்தது.

1988ஆம் ஆண்டு புனருத் தாரண சபையினர் அமரர் நாகலிங்கம் கந்தசாமி உயரிய சேவையினைத் தலைமை யாகக் கொண்டு ரூபா 25,000/- வரை செலவுசெய்து மடங்கள் இரண்டையும் புதுப்பித்தனர். அதனால் அங்கு இன்று அந்தி யேட்டிகள் செய்யக்கூடியதாக அமைந்துள்ளது. திருக்குளத் தையும் திருத்தி துப்புரவு செய்து புனிதமாக்கும் நடவ டிக்கைகள் தொடங்கவிருந்த போது திரு. ந. கந்தசாமி அமரத்துவமடைந் தார். இதனால் திருப்பணியில் பெரும் பின்னடைவு ஏற்பட் டது.

1989/90 ஆம் ஆண்டு தற் போதைய அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகரின் பேருதவியால் ரூபா 45,000/- செலவில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன நிதி உதவியுடன் கேணிப்படிகள் திருத்தியமைக் கப்பட்டன. 1990ஆம் ஆண்டு நடுப்பகுதியில் குடாநாட்டு நிலை மீண்டும் மோசமடைந்த தால் திருக்குள அபிவிருத்தி யில் மீண்டும் பின்னடைவு ஏற் பட்டது.

இருபது ஆண்டுகள் வில் லூன்றித் தீர்த்தக்கேணி பொலிவிழந்திருந்தபோது சைவமக்கள் தமது முன்னோ ருக்குரிய கடமைகளைச் செய்ய கீரிமலையையும், திருவடிநிலை யையும் நோக்கிச் சென்றனர். இது பெரும் போக்குவரத்துச் செலவுகளையும், நேரம் வீணாவதையும் உண்டுபண்ணிய போதிலும் வேறு சமீபத்திய இடமின்மையால் மக்கள் இந் நீர் நிலைகளுக்கே செல்ல வேண்டியிருந்தது. இன்று போக்குவரத்துப் பிரச்சினை மிக மோசமாகி விட்டதுமன்றி கீரிமலை, திருவடிநிலை ஆகிய புண்ணிய நீர் நிலை களும் பொதுமக்கள் அணுக வொட்டா நிலையிலுள்ளன. இதன் காரணமாக பொதுமக் கள் எங்கு தர்ப்பணம் செய் வது, எங்கு அந்தியேட்டி செய்வது எனத் தெரியாது தடுமாறி வேதனையடைகிறார் கள். தீவுப்பகுதி மக்களின் வருகை பிரச்சினையை மேலும் பெருக்கியுள்ளது. சமய நம் பிக்கை குறைந்தவர்கள் கூட தாம் நம்பினுலென்ன நம்பா விட்டாலென்ன தம் அன்புக் குரியவர்கள் நற்பேறடைய வேண்டுமென்ற அவாவினால் செய்யவேண்டிய கருமங்களை செய்துவிடவேண்டும். நல்ல முறையில் செய்ய வேண்டும் என விரும்புகிறார்கள். அப் படிச் செய்வதன் மூலம் மனம் நிம்மதி பெறுகிறார்கள். அகால மரணங்களும், அவச்சாவு களும் தாரவிடற்று அணுக முடியாவிடத்து சாவுகளும் மலிந்துள்ள இந்தக் காலகட் டத்தில் இந்த விரும்பம்

(4ம் பக்கம் பார்க்க)

# தப்பான வழியில் நாட்டை பிரேமா இட்டுச் சென்றார்

## எதிரணிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

எமது நாட்டைப் பல வருடங்களாக, அரசியல்வாதிகள் தவறான வழியில் இட்டுச் சென்றுள்ளனர். அவர்களின் வரிசையில் பிரேமதாசாவும் ஒருவர் என்று எதிர்க் கட்சிகளின் கூட்டு முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தக் காலங்களில் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் எதிர்க் கட்சிகளுக்குப் பல இடையூறுகளை விளைவித்துள்ளன.

ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக் காலமும் இவ்வாறுக் கடந்து போயுள்ளது என்றும், எதிர்க் கட்சிகள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளன. (சு-சி)

# 'ஓஸி' இறக்கவில்லை

(லண்டன்)

ஸ்ரீ லங்கா மக்கள் கட்சித் தலைவர் ஒஸி அபேகுணசேகர குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இறந்தார் என்று சந்தேசிய நேற்று முன் தினம் ஒலிபரப்பிய செய்தி தவறானது என்று நேற்று பி. பி. ஸி. 'சந்தேசிய' மன்னிப்புக் கோரியது.

ஒஸி அபே குணசேகர தற்பொழுது உயிருடன் இருக்கின்றார் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஜனாதிபதியின் கொலைச் சம்பவத்தால் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் இவ்வாறு ஒரு தவறான செய்தி ஒலிபரப்பப்பட்டது என்று 'சந்தேசிய' மேலும் தெரிவித்துள்ளது. (சு - சி)

# பிரேமா கொலைக்கு

## பிரிட்டிஷ் செய்திகள் முக்கியத்துவம்

(லண்டன்)

ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாஸாவின் படுகொலை சம்பந்தமான செய்திகளும் படங்களும் நேற்று லண்டன் பத்திரிகைகளிலும் பிரசுரமாகியிருந்தன.

மேற்படி குண்டு வெடிப்பில் பலியான ஒருவரின் துண்டிக்கப்பட்ட தலையை ஸ்ரீலங்காபொலிஸார் அருகில் சென்று ஆராய்ந்து கொண்டிருந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றும் லண்டன் பத்திரிகை ஒன்றில் பிரசுரமாகியிருந்தது. (இ - சி)

வில்லூன்றி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலோங்கி நிற்பதைக் காணும் மனநிம்மதி பல நோய்களைக் குணமாக்குகிறது. ஆகவே இன்று இதற்குரிய வசதிகளைச் செய்து கொடுப்பது சமய சேவை மட்டுமன்றிச் சமூக சேவையுமாகின்றது. இவ்விடயம் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதன் விளைவாக யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் வில்லூன்றி புனித தீர்த்தப் பரிபாலன சபையொன்றினை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

வில்லூன்றி தீர்த்தம் யாழ். குடாநாட்டு சைவமக்கள் அனைவருக்கும் உரியது என்பதையும், வண்ணை வைத்தீசுவரன் கோவில், வில்லூன்றி விநாயகர் கோவில், ஆகிய கோவில்களின் தீர்த்தமென்பதையும் இத் தீர்த்தம் அமைந்திருக்கும் காணி அரசுடைமையாக்கப்பட்டிருக்கும் யதார்த்த நிலையையும் கருத்திற் கொண்டு, இப் பரிபாலன சபை வண்ணை வைத்தீசுவரன் கோவில் ஆலயபரிபாலன சபையின் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகிய மூவர் வில்லூன்றி விநாயகர் கோவில் தர்மபரிபாலன சபையின், தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகிய மூவர், யாழ் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரால் நியமிக்கப்படும் மூவர், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் நியமிக்கப்படும் மூவர், யாழ்ப்பாண அரசாங்க அதிபரால் நியமிக்கப்படும் இந்து சமயத்தினர் மூவர் ஆகிய பதினைந்து பேரைக் கொண்டிருக்க வேண்டுமென்று பிரகடனப்படுத்தி இச்சபை இயங்க வேண்டிய வழிமுறைகள் குறித்த யாப்பு ஒன்றையும் வெளியிட்டார். இதற்கமைய வில்லூன்றி தீர்த்தத்தை பாதுகாத்துவந்த வில்லூன்றி புனருத்தாரண சபையானது 20-07-92 முதல் கலைக்கப்பட்டு புதிய வில்லூன்றி புனித தீர்த்த பரிபாலனசபை அத்திகதி முதல் பதவியேற்றது.

புனித தீர்த்த பரிபாலன சபை மேற்கொண்ட பணிகளின் பயனாக எதிர்வரும் சித்திரா பூரணை தினத்தன்று வில்லூன்றி விநாயகர் 40 ஆண்டு இடைவேளையின் பின்னர் தீர்த்தவாரி கொள்ள எழுந்தருளும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி நடைபெறவிருப்பது சைவ உலகத்தை மகிழவைத்துள்ளது.

# நேபாளம் துக்கம் அனுஷ்டிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவையொட்டி நேபாளம் இரண்டு நாள் துக்கதினம் அனுஷ்டிக்கும் என நேபாள அரசு அறிவித்துள்ளது.

இன்று திங்கட்கிழமை விடுமுறை எனவும் நேபாள அரசு அறிவித்துள்ளது. (இ)

எலிசபெத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் உட்பட பல உலகத் தலைவர்களும் ஜனாதிபதியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ளனர். (இ)

# விமான விபத்து: 70 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கடந்த செவ்வாய்க்கிழமை விமானம் ஒன்று விழுந்து நொருங்கியதில், 70க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

மோசமான வானிலை காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதென்று தெரிவிக்கப்படுகிறது. (சு-சி)

சுங்கப் பகுதியால்

# துப்பாக்கிகள் மீட்பு

(புதுடில்லி)

புதுடில்லியில் நேற்றுமுன் தினம் சுங்கப் பகுதியினர் நடாத்திய திடீர் சோதனையில் 2 ஆயிரம் நவீனரகத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

புலிகள் மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் சடலத்தருகே காணப்பட்டதாம் இவரை அடையாளம் காணும் முயற்சி தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இவரது தலை ரூபவாஹினியில் நேற்று காண்பிக்கப்பட்டது. (இ)

## நெருக்கடியான நிலையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

# மூடிய பேழையில் பிரேமா உடல்

ஜனாதிபதி பிரேமதாசாவின் பூதவுடல் சுசரித்த மாவத்தையிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது மூடிய பேழையில் பூதவுடல் வைக்கப்பட்டு பேழையின் முன்னால் அவரது புகைப்படம் வைக்கப்பட்டுள்ளது. இன்று நள்ளிரவு 12 மணிவரை பூதவுடல் இவரது வீட்டில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருக்கும். நாளை 4ம் திகதி காலை 6 மணிக்கு அஞ்சலிக்காக ஜனாதிபதி செயலகத்தில் பூதவுடல் வைக்கப்படும் அங்கும் மக்கள் அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

# அழுதவண்ணம் ஹேமா, மகள்

ஜனாதிபதியின் பூதவுடல் வைக்கப்பட்டுள்ள பேழை அருகே திருமதி ஹேமா பிரேமதாஸா வெள்ளை ஆடையுடன் அழுதவண்ணம் இருந்தார். நேற்றுக்காலை அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய ஜனாதிபதியின் மகள் துலாஞ்சலியும் அவரது கணவர் ஜெயக்கொடியும் பூதவுடல் இருந்த மூடிய பேழை மீது வீழ்ந்து கதறியழுதனர் இந்த வேளை திருமதி ஹேமா பிரேமதாஸாவும் கதறியழுதார். இவர்களுடன் ஜனாதிபதியின் உறவினர்களும் அழுத வண்ணம் அஞ்சலி செலுத்தினர்.

# அமைச்சர்கள், தளபதிகள் அஞ்சலி

ஜனாதிபதிக்கு பதில் ஜனாதிபதி, பதில் பிரதமர் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற எம் பிக்களும் நேற்று அஞ்சலி செலுத்தினர். அமைச்சர்கள் பலர் பூதவுடல் இருந்த பேழையின் மீது வீழ்ந்து அழுதவண்ணம் அஞ்சலி செலுத்தினர். இதே வேளை முப்படைத் தளபதிகளும், கூட்டுப்படைத் தளபதியும் படை உயரதிகாரிகளுடன் வந்து அஞ்சலி செலுத்தினர். இதனைத் தொடர்ந்து படைகளின் உயர்நிலை அதிகாரிகளும் அஞ்சலி செலுத்தினர்.

# பல மைல் தூரம் மக்கள் கூட்டம்

ஜனாதிபதிக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அவரது இல்லத்திற்கு நேற்று ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வந்திருந்தனர். நாட்டின் பல பகுதியிலுமிருந்து மக்கள் சாரிசாரியாக தலைநகருக்கு வந்த வண்ணமுள்ளனர். மக்கள் வசதிக்காக நாட்டின் பல பகுதியிலுமிருந்து விஷேட ரயில், பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் இல்ல முன்பாக பல மைல் தூரத்திற்கு மக்கள் நின்று அஞ்சலி செலுத்தினர்.

# அடையாளம் காணாத பல சடலங்கள்

நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட பலரது சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில், கொழும்பு ஆஸ்பத்திரி பிரேத அறையில் உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றன. இக்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 14 என அறிவிக்கப்பட்டுள்ளது. சைக்கிளில் வந்த தற்கொலைப்படையாளி, ஊர்வலத்தில் சென்றுகொண்டிருந்தவரோடு நேரடியாக மோதி, குண்டை வெடிக்க வைத்ததாகப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

# தற்கொலைப் படை தலைநகர் வரலாம்

விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படை கொழும்பு வந்திருப்பதாக எச்சரிக்கை செய்யப்பட்ட போதிலும், இத்தகைய சம்பவம் நடைபெற்றிருப்பது துரதிஷ்டவசமானது என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மேலும் தற்கொலைப் படையினர் காரில் வரக்கூடும் என எதிர்பார்த்த வேளையில் தற்கொலைப்படை கொலையாளி தானே வெடி குண்டுகளை சுமந்து வந்தார் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

# தமிழர் விவகாரத்தில் மாற்றமில்லை

பிரேமாவின் கொலையில் எதுவித தொடர்புமில்லை என புலிகளின் தலைமைபீடம் ஆணித்தரமாக மறுத்துள்ளது. ஜனாதிபதிக்கு ஏராளமான எதிரிகள் உள்ளனர். பிரேமா, தானே உருவாக்கிய சூழ்நிலைக்கு பலியாகிவிட்டார் என பாரிஸிலிருந்து புலிகளின் பேச்சாளர் திரு திலகர் நேற்று பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் கூறினார். பிரேமாவினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானோரில் எவராவது அவரை கொல்ல தனது உயிரை பணயம் வைக்க முன் வந்திருக்கலாம் தற்கொலை, தொழில் நுட்பம் என்ற காரணிகளை காட்டி புலிகளை குற்றம் சாட்டுவதில் அர்த்தமில்லை. அரசாங்க மாற்றங்களோ அரசியல் தலைவர்களின் மறைவுகளோ தமிழ் மக்களை பொறுத்த வரையில் விடிவான மாற்றங்கள் எதனையும் கொண்டுவருவதில்லை, என்பதை கடந்த 40 வருடகால வரலாறு காட்டுகிறது. தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதம் அங்கு நன்கு புரையோடிப் போயுள்ளது. எனவே பிரேமாவின் மரணத்தின் பின்பும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை புரிந்து கொண்டு அதன் அடிப்படையில் சமாதான, சௌஜன்ய ரீதியில் பிரச்சினையை தீர்வுக்கு கொண்டு வரக்கூடிய அரசியல் தலைமை சிங்களவரிடையே உடனடியாக தோன்றுமென நாம் எதிர்பார்க்கவில்லை. அரசியல் தலைமையோ இராணுவ தலைமையோ சிங்கள தேசத்தின் பொறுப்பை எடுத்த பொழுதிலும் தமிழீழத்தை பொறுத்தவரை ஏதும் அடிப்படையான மாற்றம் ஏற்படும் என்பதை கூறமுடியாதுள்ளது என்றார். (இ-சு-க)

## மரண அறிவித்தல்

வைத்தியக் கலாநிதி

### இரத்தினசபாபதி பாக்கியநாதன்

(ஜே. பி.)

வைத்திய கலாநிதி இ. பாக்கியநாதன் (ஜே. பி.) 2-5-93 இல் காலை காலமானார். இவர் திருநெல்வேலி கிழக்கு காலஞ்சென்ற வைத்தியகலாநிதி பொன்னையா இரத்தினசபாபதி, திருமதி பாக்கியம் இரத்தினசபாபதியின் அன்பு மகனும், திருமதி பா. புஸ்பராணியின் (ஊர்காவற்றுறை நீதிமன்றம்) அன்புக்கணவரும், செல்வன் விசாகன், சுகந்தன் (யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. இ கைலநாதன் (சட்டத்தரணி), திருமதி சிவகுமார் சரோஜினிதேவி (திருமலை), திரு. இ பொன்னையா, திருமதி விஜயராகவன் சசிதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி கமலநாதன் பாமதி (கொழும்பு), திருமதி பொன்னையா இந்திராணி (ஆசிரியை, யாழ். செங்குந்த இந்துக்கல்லூரி), திரு. சி. சிவகுமார் (ஆசிரியர், திருமலை), திரு. வ. விஜயராகவன் (லண்டன்), திரு. து. ஸ்ரீ கிருஷ்ணராசா (கனடா), திரு. து. ஸ்ரீஸ்கந்தராசா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

இ. பொன்னையா (சகோதரர்)

பொன்னையா வைத்தியசாலை,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
யாழ்ப்பாணம்.

(கி 75)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 03-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, [illegible] under licence Number [illegible]